வணங்குகிறேன். தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதைப் புதிதாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 40 ஆண்டுகால பழமையான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைப் புதிதாகக் கட்டுவதற்கு முதற்கட்டமாக 10 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நிதி அளித்து பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல் கடந்த நிதிநிலை அறிக்கையிலே 7 புதிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, வருகின்ற நிதியாண்டில் தூத்துக்குடி மாவட்டத்தில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் கட்டுவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**39—**

## உதவி ஆணையர் அலுவலகம்

***19177—திரு. எம்.கே. அசோக்:**

*மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேளச்சேரி தொகுதியில் உணவுப்பொருள் வழங்கல் துறையின் உதவி ஆணையாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2014 பிப்ரவரி 3]

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதியில் உதவி ஆணையாளர் அலுவலகம் அமைக்கத் தற்பொழுது சாத்தியக் கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தொடர்புடைய பகுதிகளுக்குட்பட்ட அங்காடிகளை இணைத்து புதிய உதவி ஆணையர் அலுவலகம் துவக்குவதற்கான சாத்தியக் கூறுகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்து, அதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப உரிய நேரத்தில் உதவி ஆணையர் அலுவலகம் அமைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

**திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னகமே! திராவிடமே! செந்தமிழே! சீரும், சிறப்பும் பெற்ற கன்னித் தமிழ்நாட்டினுடைய முதல்வரே! எண்ணிச் செயலாற்றும் நுண்ணறிவே! தருமம் நித்தம் தழைத்திடும் தாயே! நல்ல திட்டங்கள் பல தந்த பைந்தமிழே! இமை கண்ணைக் காப்பதுபோல், கடமை காக்கும் அரசின் தலைமை தருவார்! இதய தெய்வம் அம்மா வருவார், தமிழ்நாட்டைப்போல் பாரதத்தைப் பெறுவார் (மேசையைத் தட்டும் ஒலி) பாரத மாதாவிற்கு ஜெ! பாரத மாதா இனி அம்மா ஜெ! (மேசையைத் தட்டும் ஒலி) பாரத மாதாவிற்கு ஜெ! பாரத மாதா இனி அம்மா ஜெ! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே அதிக வாக்களார்களைக்கொண்ட வேளச்சேரி தொகுதியில், வேளச்சேரியில் உள்ள 45,117 குடும்ப அட்டைகளும் சைதாப்பேட்டை மண்டலத்தில் உள்ளன. தரமணி, அடையாறு, திருவான்மியூர் பகுதிகளிலுள்ள 65,000 குடும்ப அட்டைகள் மயிலாப்பூர் மண்டலத்திலே இணைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு மண்டலங்களிலுள்ள, வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட குடும்ப அட்டைகளைப் பிரித்து வேளச்சேரி தொகுதிக்கு என்று தனியாக

ஓர் உதவி ஆணையர் அலுவலகம் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அமைத்துத் தர முன்வந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைக் கூறி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**40—**

**பகுதிநேர கால்நடைக் கிளை நிலையம்**

***7356—திரு. சு. பவுன்ராஜ்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், எடுத்துக்கட்டி ஊராட்சியில் பகுதிநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செம்பனார்கோவில் ஒன்றியம், எடுத்துக்கட்டி ஊராட்சிப் பகுதியில் பகுதிநேர கால்நடைக் கிளை மருத்துவமனையை அமைத்துத் தருமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார். அரசு விதிகளின்படி அங்கே கால்நடைகளின் எண்ணிக்கை போதுமான அளவிற்கு இல்லாத காரணத்தினால், எடுத்துக்கட்டி ஊராட்சிக்கு அருகில் உள்ள திருகாளச்சேரி ஊராட்சியையும் இணைத்து அங்கே ஓர் பகுதிநேர கால்நடைக் கிளை மருத்துவமனை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப்பெற்று அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*